படையிலேதான் நாம் எண்ணிக்கையை நிர்ணயிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மேலும் மெக்காவிலும், மதினாவிலும் தங்கக்கூடிய பயணிகளுடைய இட நிலைமையைப் பொறுத்து, நாம் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. நம் இடமே அங்கேயிருப்பதைத் திரும்பவும் பெற்று இங்கே இருக்கக்கூடிய யாத்திரிகர்கள் அங்கே போய் இன்னும் சிரமம் இல்லாமல் அந்தப் பயணத்தைச் சிறந்த முறையில் முடிக்க வேண்டுமென்பதற்காக நம்முடைய அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரியகுளம் கோட்டத்தில் பாசன வசதி செய்து தரும் திட்டம்.

*வினா எண் 602—திரு. வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியகுளம் கோட்டத்தில் வைரவன் ஆணையிலிருந்து பெரியகுளம் வரை மேற்கு மலை அடிவாரத்தில் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் பதினெட்டாம் கால்வாய் திட்டத்தை நிறைவேற்ற அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் தலைமைப் பொறியாளரின் (ஆய்வு) ஆய்வில் உள்ளது.

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கான சம்பள விடுப்பு வசதி.

*வினா எண் 603—திரு. எஸ். டி. உகம் சந்த் : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் உள்ள தொழிலாளர்களால் மற்ற ஆலைகளில் வழங்கப்படுவது போன்று தங்களுக்கும் ஒரு மாத சம்பள விடுப்பு தேவை என்னும் கோரிக்கை அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) எல்லா கூட்டுறவு சர்க்கரை ஆலைகளிலும் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும் ஒரே மாதிரியான விடுப்புச் சலுகைகள் வழங்கப்படுவது குறித்து அரசு ஆய்ந்து வருகிறது.

1982 மார்ச் 22]

திரு. எஸ்.டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் கூட்டுறவுச் சர்க்கரை ஆலையில் அலுவலகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களுக்குச் சம்பளத்துடன் 30 நாட்கள் விடுப்பு விடப்படுகிறது. அதே நேரத்தில், பேக்டரியிலே வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு 15 நாட்கள் தான் விடுப்பு விடப்படுகிறது. அதை மாற்றி பின் தேதியிட்டு அவர்களுக்கு இந்தச் சம்பள விடுப்பு விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் ஆலையில் மட்டும் அல்ல, மற்ற கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும் இன்னும் இருக்கிற பொதுத் துறை நிறுவனங்களிலும் இருக்கிற பணியாளர்களுடைய விடுமுறை நாட்கள், மற்ற சலுகைகள் குறித்து, தலைமைச் செயலகத்திலே உள்ள அரசுத் துறைச் செயலாளர்கள் மட்டத்திலே பேசப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு துறையிலே இருந்தும், பொதுத் துறை, கூட்டுறவுத் துறை நிறுவனங்களிலே, அலுவலகங்களிலே பணியாற்றுபவர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படுகின்ற சலுகைகள், விடுமுறை நாட்கள் பற்றிய அனைத்து விவரங்களையும் சேகரித்து நிதித் துறைக்கு அனுப்பும்படி சொல்லப்பட்டிருக்கிறது. அதற்குப் பின்னாலே தக்க முடிவுகள் மேற்கொள்ளப்படும்.

EXPORTS OF THE PRODUCTS OF TAMIL NADU CERAMICS LTD.

* Q. No. 604—Thiru Salem M. Arumugam : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Tamil Nadu Ceramics Ltd., has been exporting its products (1) Outside the state; and (2) Outside India; and

(b) If so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) ஆம்.

(ஆ) வெளி மாநிலங்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அனுப்பப்படும் உற்பத்திப் பொருட்களின் உத்தேச மதிப்பு :

	(ரூ. இலட்சத்தில்)
பீங்கான் சாமான்கள்	6.00
துப்புரவு சாமான்கள்	5.00
உப்பு மெருகிட்ட கற்குழாய்கள்	1.50
பீங்கான் ஜாடிகள்	4.50
மொத்தம் ..	17·00